**தி நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**
**பதிவு மற்றும் தலைமை அலுவலகம் : நியூ இந்தியா அசூரன்ஸ் பில்டிங், 87, எம்.ஜி. ரோடு, ∴போர்ட், மும்பை – 400 001**
**பிராந்திய அலுவலகம்: 770-A, ஸ்பென்சர் டவர்ஸ், III-வது தளம், அண்ணாசாலை, சென்னை – 600 002.**

**DO/BO...........................................................................................**

---

**ஏஜென்சி.........................................................** **பாலிசி எண்.....................................**

**ஸ்டேன்டர்டு தீ மற்றும் சிறப்பு ஆபத்துகளுக்கான பாலிசி (பொருள் சேதம்)**

அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கப்பட்டுள்ள காப்பீடு செய்யப்பட்ட நபர், அவ்வட்டணையில் குறிப்பிடப்பட்டுள்ள முழு பிரிமியத் தொகையை **தி நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட்** - க்கு (இதன் பிறகு நிறுவனம் என்று அழைக்கப்படும்), நிறுவனமானது (இங்கு இடம்பெற்றுள்ள அல்லது ஒப்புக்கொள்ளப்பட்டு அல்லது வேறுவிதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி, நிபந்தனைகள் மற்றும் விலக்குகளுக்கு உட்பட்டு), பிரிமியத்தொகை செலுத்திய பிறகு மேற்கூறிய அட்டவணையில் விவரணை செய்யப்பட்டுள்ள சொத்து அல்லது அத்தகைய சொத்தின் ஒரு பகுதி, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டு காலஅளவின்போது அல்லது பாலிசியின் புதுப்பித்தலுக்காக தேவைப்படும் பிரிமியத் தொகையை காப்பீடு செய்யப்பட்ட நபரிடமிருந்து ஏற்றுக்கொண்டிருக்குமானால், அத்தகைய தொடர்ந்து வரும் காலஅளவின்போதும் இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆபத்துகள் ஏதாவது ஒன்றால், நாசமடையுமானால் அல்லது சேதமடையுமானால் காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு அவ்வழிவு நிகழ்வின்போது அச்சொத்தின் மதிப்பை அல்லது தனது விருப்பத்தேர்வின்படி, அத்தகைய சேதத்திற்கான தொகையை அல்லது அத்தகைய சொத்து அல்லது அதன் பகுதி ஏதாவதை மாற்றித்தரவோ அல்லது மறுகட்டமைப்பு செய்து தரவோ ஒப்புக்கொள்கிறது.

**I. தீ**

**காப்பீடு செய்யப்பட்ட சொத்திற்கு கீழ்கண்ட காரணங்களால் விளைந்த அழிவு அல்லது சேதத்தை தவிர்த்து**

(a) (i) அதன் சுய நொதிப்பு, இயல்பான வெப்பமேறல் அல்லது தானாகவே தீபற்றுதல் அல்லது எரிதல்

(ii) வெப்பமேற்றுதல் அல்லது உலர வைப்பதற்கான எந்தவொரு செய்முறையை மேற்கொண்டிருக்கும்போது

(டி) அரசு அல்லது பொது அதிகாரி ஒருவரின் ஆணையின்பேரில் காப்பீடு செய்யப்பட்ட சொத்தை எரித்தல்

**II. மின்னல்**

III. **வெளிப்புற வெடிப்பு / உள்ளார்ந்த வெடிப்பு**

**கீழே குறிப்பிடப்பட்டவைகள் மீதான இழப்பு, அழிவு அல்லது சேதம்**

a) பாய்லர்கள் (வீட்டு உபயோக கொதிகலன்கள் அல்லாத பிறவற்றிற்கு), எக்கானமைசஸ் அல்லது பிற பாத்திரங்கள், எந்திரங்கள் அல்லது சாதனங்கள் (நீராவி உருவாக்கப்படும் கலன்கள்)

அல்லது அவைகளது சொந்த வெளிப்புற வெடிப்பு / உள்ளார்ந்த வெடிப்பினால் அக்கலன்களில் உள்ள பொருட்களுக்கு விளைகின்ற இழப்பு, அழிவு அல்லது சேதம்.

டி) மைய விலக்கு விசைகளினால் விளைகின்ற இழப்பு, அழிவு அல்லது சேதம்.

## IV. விமானத்தால் சேதம்

அழுத்த அலைகளினால் ஏற்பட்ட சேதங்களைத் தவிர்த்து, விமானம், பிற விண்வெளி அல்லது வான்வெளி சாதனங்கள் / கருவிகள் மற்றும் அவற்றிலிருந்து கீழே போடப்பட்ட பொருட்களினால் ஏற்படும் இழப்பு, அழிவு அல்லது சேதம்.

## V. கலவரம், வேலைநிறுத்தம் மற்றும் தீய நோக்குடன் செய்யப்படுகின்ற சேதம்

கீழ்கண்ட விஷயங்கள் அல்லது நேர்வுகளினால் விளைகின்றவற்றைத் தவிர்த்து, காப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள், நேரடியாக, வெளியாந்த வன்முறை வழிவகைகளினால் விளைந்த இழப்பு அல்லது வெளிப்படையாகத் தெரிகின்ற பொருள் சேதம் அல்லது அழிவு.

ய) முழுமையான அல்லது பகுதி அளவிலான பணி நிறுத்தம் அல்லது எந்தவொரு செய்முறை அல்லது இயக்கச் செயல்பாடுகள் நிறுத்தப்படுதல் அல்லது தடைகள் அல்லது இடையூறுகள் அல்லது காலம் தாழ்த்துதல் அல்லது எந்த வகையிலுமான செய்யத் தவறிய செயல்பாடுகள்.

b) அரசாங்கம் அல்லது சட்டப்பூர்வமாக நிறுவப்பட்ட அதிகார அமைப்பு ஒன்றின் ஆணையின் பேரில், பறிமுதல், நிர்பந்தமாக எடுத்துக்கொள்ளுதல், கேட்டுப்பெறுதல் அல்லது அழித்தலின் காரணமாக ஏற்படுகின்ற நிரந்தரமான அல்லது தற்காலிக உடைமை பறித்தல்.

உ) ஒரு கட்டிடம் அல்லது தொழிலகம் அல்லது பிரிவு அல்லது எந்திரம் ஆகியவற்றை சட்டத்திற்குப் புறம்பாக எந்த நபராவது தன்வசம் எடுத்துக்கொண்டதனால் அல்லது அதற்கு செல்வதற்கான அணுகுவசதியை தடைசெய்வதால் எந்தவொரு கட்டிடம், தொழிலகம் அல்லது பிரிவு அல்லது எந்திரம் ஆகியவை மீது நிரந்தர அல்லது தற்காலிக உடைமை இழப்பு.

ன) கொள்ளையடித்தல், வீடுடைத்து திருடுதல், திருட்டு, சிறுதிருட்டு அல்லது இத்தகைய ஏதாவது முயற்சி, எந்தவொரு தீங்கான செயலில் எந்தவொரு நபரால், எந்த வகையான, எந்தவொரு செய்யத்தவறிய செயலால் (அத்தகைய செயலானது, பொது அமைதியை சீர்குலைப்பதற்கான முயற்சியில் நடைபெற்றாலும் அல்லது இல்லாவிட்டாலும்).

**பயங்கரவாத செயலால் ஏற்படும் சேதம் - விலக்குவதற்கான உத்தரவாதம்:**

இந்த காப்பீட்டில் இதற்கு மாறாக, எந்தவொரு விஷயம் குறிப்பிடப்பட்டு இருந்தபோதிலும் எந்தவொரு பயங்கரவாத செயலின் விளைவாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது அது தொடர்பாக ஏற்பட்ட இழப்பு, சேதத்திற்கான செலவு அல்லது மதிப்பு எதுவாயினும் மற்றும் இச்செயல் நடப்பதற்கான நோக்கம் அல்லது பங்களிப்பு செய்த நிகழ்வு எதுவாயினும் அல்லது இவைகள் ஒரே நேரத்தில் நிகழ்ந்தாலோ அல்லது வேறுபிற வரிசைக்கிரமத்தின்படி நிகழ்ந்தாலோ அவற்றை இக்காப்பீடு விலக்குகிறது.

ஒரு பயங்கரவாதச் செயல் என்ற சொற்றொடருக்கு, வன்முறை அல்லது அடக்குமுறை மற்றும் அல்லது அவ்வாறு செய்வதாக மிரட்டல் விடுத்து ஒரு நபரோ அல்லது பல நபர்கள் அடங்கிய குழுவோ, தனித்தோ அல்லது எந்தவொரு அமைப்பு அல்லது அரசுத் தொடர்புடனோ எந்தவொரு அரசு அல்லது பொதுமக்களை அல்லது பொதுமக்களில் ஒரு பிரிவினரை அச்சத்தில் ஆழ்த்த வேண்டுமென்ற நோக்கம் உட்பட, அரசியல், சமய, கொள்கைச் சார்ந்த அல்லது வேறு நோக்கங்களுக்காக செய்கின்ற எந்த செயலையும்

உள்ளடக்கியதாக ஆனால், அவற்றோடு நின்றுவிடாத இத்தகைய எந்தவொரு செயலையும் குறிப்பதாக இப்பாலிசி தொடர்பாக கருதப்படும். எந்தவொரு பயங்கரவாத செயலையும் கட்டுப்படுத்துவதற்காக, தடுப்பதற்காக, அடக்குவதற்காக அல்லது இது தொடர்பாக எடுக்கப்பட்ட எந்தவொரு செயலினால் அல்லது அதன் தொடர்பினால் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ விளைந்த எந்தவொரு இயல்பாக இருப்பினும், அதனால் ஏற்படும் இழப்பு, சேதம் அல்லது செலவு அல்லது செலவீனங்களையும் இந்த வாரண்ட்டி விலக்குகிறது.

இந்த விலக்கு அம்சத்தின் காரணமாக, எந்தவொரு இழப்பு, சேதம், செலவு அல்லது செலவீனங்கள் இக்காப்பீட்டின் கீழ் வரவில்லை என காப்பீட்டு நிறுவனம் கூறுமானால், அவ்வாறு இல்லையென்பதை நிரூபிப்பதற்கான பொறுப்பு காப்பீடு செய்யப்பட்ட நபரைச் சார்ந்ததாகும்

இம்மேற்குறிப்பின் எந்தவொரு பகுதியாவது செல்லாததாக அல்லது அமல்படுத்த இயலாததாக இருக்குமென அறியப்படுமானால், எஞ்சியுள்ள பகுதிகள் முழுத்திறன் மற்றும் வலுவுடன் அமலிலிருக்கும்.

## VI. சூறாவளி, புயல், கடும்காற்று, சுழல்காற்று, வெள்ளம் மற்றும் நீர்பெருக்கு

நிலநடுக்கம், எரிமலைவெடிப்பு அல்லது இயற்கையின் பிற சீற்றங்களினால் விளைகின்றவைகளைத் தவிர்த்து, சூறாவளி, புயல், கடும்காற்று, சுழல்காற்று, வெள்ளம் மற்றும் நீர் பெருக்கு ஆகியவற்றால் நேரிடையாக விளைகின்ற இழப்பு, அழிவு அல்லது சேதம் (எங்கெல்லாம் நிலநடுக்கத்திற்கான காப்பீடு ஒரு சேர்த்துக்கொள்ளக்கூடிய காப்பீடாக தரப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் “எரிமலைவெடிப்பு அல்லது இயற்கையின் பிற சீற்றங்களினால் விளைகின்றவைகளைத் தவிர்த்து”, என்ற வார்த்தைகள் அதிலிருந்து நீக்கப்பட்டதாக இருக்கும்.

## VII. மோதலினால் ஏற்படும் சேதம்

காப்பீடு செய்யப்பட்டவரின் சொத்திற்கு ரயில் / சாலை வாகனம் அல்லது மிருகத்தினால் நேரடி தொடர்பின் காரணமாக கீழ்வரும் நபர்களுக்கு சொந்தமாக இல்லாத அல்லது அவர்களைச் சேர்ந்திராதவற்றால் ஏற்பட்ட இழப்பு அல்லது வெளிப்படையாகத் தெரியும் பொருட்சேதம் அல்லது அழிவு

ய) காப்பீடு செய்யப்பட்ட நபர் அல்லது அக்கட்டிடங்களில் வசிப்பவர் அல்லது

டி) தங்களது பணி நிமித்தமாக, பணியில் ஈடுபட்டுள்ள அவர்களது பணியாளர்கள்.

## VIII. பாறைச்சரிவு உட்பட, மண்சரிவு மற்றும் பூமியில் அமிழ்தல்

கீழ்கண்டவற்றைத் விலக்கி, கட்டிடம் அமைந்திருக்கின்ற அமைவிடத்தின் ஒரு பகுதி பூமியில் அமிழ்வதால் அல்லது மண்சரிவு / பாறைச்சரிவால் நேரிடையாக ஏற்படுகின்ற இழப்பு, அழிவு அல்லது சேதம்:

ய) வழக்கமான விரிசல், புதிய கட்டமைப்பு கீழே இறங்குதல் அல்லது பூமியில் படிதல்

டி) புதிதாக நிரப்பப்பட்ட நிலப்பரப்பு நகர்தல் அல்லது கீழே இறங்குதல்

உ) கடற்கரையோர அல்லது ஆற்று அரிப்பு

d) தவறான வடிவமைப்பு அல்லது குறைபாடுள்ள பணிச்செயல்பாடு அல்லது குறைபாடுள்ள பொருட்களின் பயன்பாடு

ந) எந்தவொரு கட்டிடத்தை உடைப்பது, அதன் கட்டுமானப்பணி, கட்டமைப்பில் மாற்றங்கள் அல்லது சீர்செய்தல் அல்லது அஸ்திவாரப்பணிகள் அல்லது தோண்டிஎடுத்தல் பணிகள்.

IX. **நீர்த்தொட்டிகள், கருவிகள் மற்றும் சாதனங்கள் உடைவது மற்றும் / அல்லது நிரம்பி வழிவது**

X. **ஏவுகணைச் சோதனை செயல்பாடுகள்**

XI. **தானியங்கி நீர்த்தெளிப்பான் அமைப்புகளிலிருந்து நீர்கசிவு**

**கீழ்வரும் காரணங்களினால் ஏற்படும் இழப்பு, அழிவு அல்லது சேதம் நீங்கலாக**

a) கட்டிடங்கள் அல்லது கட்டிட வளாகங்களுக்கு பராமரிப்பு / சீர்செய்யும் பணிகள் அல்லது மாற்றிக்கட்டுதல்

டி) நீர்த்தெளிப்பான் அமைப்பை சீர்செய்தல், அகற்றுதல் அல்லது விரிவாக்குதல்

உ) காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு தெரிந்திருந்த கட்டுமானப் பணியில் குறைபாடுகள்ஸ

XII. **புதர் தீ**

காட்டுத் தீயால் விளைந்த இழப்பு, அழிவு அல்லது சேதம் நீங்கலாக,

நிறுவனத்தின் கடப்பாடு பொறுப்பானது, எந்தநேர்விலும், அட்டவணையில் காப்பீடு செய்யப்படவேண்டிய ஒவ்வொரு பொருளுக்கும் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டுத் தொகைக்கு அல்லது ஒட்டுமொத்தமாக இதில் காப்பீடு செய்யப்பட்டுள்ள மொத்த தொகைக்கு அல்லது இதனோடு இணைக்கப்பட்டுள்ள அல்லது இதில் இடம்பெற்றுள்ள குறிப்பாணையில் நிறுவனத்தால் அல்லது நிறுவனம் சார்பாக கையெழுத்திடப்பட்டு, முந்தைய தொகைக்கு பதிலாக மாற்றி குறிப்பிடப்பட்டுள்ள தொகை அல்லது தொகைகளுக்கும் அதிகமாக இருக்காது.

**(A) பொது விலக்குகள்**

1. கீழ்வருபவற்றை இப்பாலிசி காப்பீட்டின் கீழ் கொண்டிருக்காது .

(a) இப்பாலிசியின் கீழ் இடம்பெற்றுள்ள மின்னல், புயல், வெள்ளம், சூறாவளி மற்றும் நீரில் மூழ்குதல், பூமியில் அமிழ்தல், நிலச்சரிவு மற்றும் பாறைச்சரிவு போன்ற “கடவுளின் செயலால் / இயற்கையால் ஏற்படும் ஆபத்துகள்” ஆகியவற்றின் காரணமாக ஏற்படும் ஒவ்வொரு மற்றும் அனைத்து இழப்புகளுக்கும் குறைந்தபட்சம் ரூ.10,000 என்பதற்கு உட்பட்டு, ஒவ்வொரு மற்றும் அனைத்து உரிமக் கோரிக்கைகளிலும் முதல் 5%

(டி) இப்பாலிசியின் கீழ், காப்பீடு செய்யப்பட்டுள்ள நபருக்கு ஈட்டுறுதி செய்யப்பட்டுள்ள பிற ஆபத்துகளிலிருந்து உருவாகின்ற ஒவ்வொரு மற்றும் அனைத்து இழப்புகளுக்கும் முதல் 10,000 ரூபாய்.

(c) இடருக்காக காப்பீட்டு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.50 கோடிக்கும் அதிகமாக இருக்கும்போது, உரிமக்கோரிக்கை அனுபவம் 200% - க்கும் அதிகமாக இருக்கும் நேர்வில் குறைந்தபட்சம் ரூ.10,000 என்பதற்கு உட்பட்டு, அனைத்து மற்றும் ஒவ்வொரு உரிமக்கோரிக்கையிலும் உரிமக்கோரிக்கைத் தொகையில் கூடுதலாக, 2.5 சதவிகிதம் (எ.கா. குறைந்தபட்ச மொத்த மிகுதித்தொகை ரூ.20,000) என்ற விதி பொருந்தும்.

காப்பீடு செய்யப்பட்ட நபர் ஒருவருக்கு, ஒரு நிகழ்விற்கு இந்த மிகுதித்தொகை விதி பொருந்தும்.

2. சண்டை, போர், படையெடுப்பு, அன்னியநாட்டு எதிரிகளின் செயல், பகைமை (போர் பிரகடனம் செய்யப்பட்டு இருந்தாலும், செய்யப்படாமல் இருந்தாலும்) உள்நாட்டுப் போர், எதிர்ப்பு புரட்சி, உள்நாட்டு குழப்பம், இராணுவப் புரட்சி அல்லது ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றல் ஆகியவற்றால் ஏற்பட்ட இழப்பு, அழிவு அல்லது சேதம்.

3. காப்பீடு செய்யப்பட்ட சொத்திற்கு நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ கீழ்வரும் காரணங்களால் ஏற்படும் இழப்பு, அழிவு அல்லது சேதம்.

1. a) கதிர்வீச்சு அல்லது ஆதாரம் எதுவாக இருப்பினும் அதிலிருந்து கதிர்வீச்சு செயல்பாட்டினால் மாசுபடல் அல்லது அணு எரிபொருட்களிலிருந்து அல்லது அணு எரிபொருட்களின் எரிதலினால் கிடைக்கின்ற எந்தவொரு பொருட்களினால் விளைகின்ற அல்லது ஏற்படுகின்ற அல்லது உருவாகின்ற எந்தவொரு சொத்துக்கும் ஏற்படுகின்ற இழப்பு, அழிவு அல்லது சேதம்.

b) கதிர்வீச்சு நச்சுள்ள வெடிபொருட்கள் அல்லது அணு ஆயுதங்களிலுள்ள பிற ஆபத்துகரமான அம்சங்களினால் அல்லது அதிலுள்ள அணுப்பொருட்களினால் விளைகின்ற எந்தவொரு இழப்பு, அழிவு அல்லது சேதம்.

4. கீழ்கண்டவை நீங்கலாக, காப்பீடு செய்யப்பட்ட சொத்திற்கு மாசுபடல் அல்லது நச்சுத் தொற்றினால் ஏற்பட்ட இழப்பு, அழிவு அல்லது சேதம்.

a). ஒரு பாலிசியின் கீழ், காப்பீடு செய்யப்பட்டுள்ள ஆபத்திலிருந்து விளைகின்ற மாசுபடல் அல்லது நச்சுத்தொற்று

b). மாசுபடல் அல்லது நச்சுத் தொற்றிலிருந்து உருவான இங்கு காப்பீடு செய்யப்பட்டுள்ள எந்தவொரு ஆபத்து,

5. இப்பாலிசியில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, ரூ.10,000-க்கு மேல் அதிகமாக இராத தொகைக்கான தங்கம் அல்லது பொருத்தப்படாத விலையுயர்ந்த கற்கள், அரிய கலைப்பொருட்கள் அல்லது கலைப்படைப்புகள் அல்லது நம்பிக்கையின் பேரில் அல்லது கமிஷனின் அடிப்படையில் வைத்திருந்த பொருட்கள், கையெழுத்துப் பிரதிகள், பத்திரங்கள், கடன் பத்திரங்கள், பரிவர்த்தனைப் பத்திரங்கள், வங்கி / கருவூல அல்லது பிராமிசரி நோட்டுகள், அஞ்சல் தலைகள், அஞ்சல்தலை தொகுப்புகள், வர்த்தக கணக்குப் புத்தககங்கள், பணத்தாள்கள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள், கணினி ஆவணங்கள், வெடிபொருட்கள் ஆகியவற்றிற்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதம்.

6. வெப்ப / குளிர் நிலைகளில் ஏற்பட்ட மாற்றத்தினால் குளிர்பதன சேமிப்பு கிடங்குகளில் வைக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு விளைந்த இழப்பு, அழிவு அல்லது சேதம்.

7. சுய வெப்பமடைதல் அல்லது மின்சார கசிவு, மின்சார சார்ட் சர்க்யூட் அல்லது ஆர்க்கிங் அல்லது வேறுஎந்த இயந்திர ரீதியான அல்லது மின்சார செயலிழப்பு அல்லது குறைபாடுகளினால் அல்லது எந்தவொரு காரணத்தினாலும் (மின்னல் தாக்குதல் உட்பட) எந்தவொரு மின்சார இயந்திரம் / சாதனம், ∴பிட்டிங்குகள் ஆகியவற்றிற்கு ஏற்படும் இழப்பு, அழிவு அல்லது சேதம். இவ்விலக்கல் ஷரத்தானது, அவ்வாறு பாதிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட மின்சார இயந்திரம், சாதனம் ∴பிக்சர் அல்லது ∴பிட்டிங் ஆகியவற்றிற்கு மட்டுமே பொருந்தும். நெருப்பால் அழிவுக்குள்ளாகின்ற அல்லது சேதமடைகின்ற வேறுஎந்த இயந்திரங்கள், சாதனங்கள், ∴பிக்சர்ஸ் அல்லது ∴பிட்டிங்குகளுக்கு இது பொருந்தாது.

8. உரிமக்கோரிக்கை தொகை மீது முறையே 3% மற்றும் 1%-க்கும் அதிகமாக காப்பீடு செய்யப்பட்ட நபரின் சொத்திற்கு, காப்பீடு மேற்கொள்ளப்பட்ட ஆபத்தினால் ஏற்பட்ட இழப்பு, அழிவு அல்லது சேதத்தை தொடர்ந்து (1) கட்டிடக்கலை நிபுணர்கள், சர்வேயர்கள் மற்றும் கலந்தாலோசனை பொறியாளர்களின் கட்டணங்கள் மற்றும் (ii) உடைந்த பொருட்கள் மற்றும் கழிவுகளை அகற்றுதல் ஆகிய பணிகளுக்காக அவசியமாக ஏற்படும் செலவுகள்

9. வருவாய் இழப்பு, தாமதத்தால் இழப்பு, சந்தையிழப்பு அல்லது எந்தவொரு வகையிலான அல்லது விவரணை எதுவாகயிருப்பினும், பின்விளைவாக அல்லது மறைமுகமாக ஏற்படும் இழப்பு அல்லது சேதம்.

10. காப்பீட்டின் கீழ் வருகின்ற ஆபத்துகள் ஏதாவதொன்று நிகழ்வதால், விளைந்த பணிநிறுத்தம் அல்லது எந்தவொரு செய்முறை அல்லது செயல்பாடு மீது குறுக்கீடு அல்லது இயக்க நிறுத்தம் ஆகியவற்றினால் விளைகின்ற, கெட்டுப்போகின்ற செயல்பாட்டால் வருகின்ற இழப்பு அல்லது சேதம்.

11. கலவரம், வேலைநிறுத்தம், தீங்குநோக்க மற்றும் பயங்கரவாத செயலால் ஏற்படும் சேதத்திற்கான காப்பீட்டின் கீழ், வழங்கப்பட்டருப்பதைத் தவிர்த்து காப்பீடு செய்யப்பட்ட ஆபத்து நிகழ்விற்கு பிறகு அல்லது அது நடைபெறும் வேளையில் திருட்டால் ஏற்படும் இழப்பு.

12. நிலநடுக்கம், எரிமலை வெடிப்பு அல்லது இயற்கையின் பிற சீற்றங்களினால் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது அவற்றால் அல்லது அவற்றின் வழியாக அல்லது அவற்றின் விளைவாக ஏற்படும் எந்தவொரு இழப்பு அல்லது சேதம்.

13. 60 நாட்களுக்கு மேற்படாத காலஅளவிற்கு சரிசெய்தல் பணிகள், சுத்தப்படுத்துதல், புதுப்பித்தல் அல்லது இதைப்போன்ற வேறு நோக்கங்களுக்காக தற்காலிகமாக அகற்றப்பட்டு கொண்டு செல்லப்படும் இயந்திரங்கள் மற்றும் சாதனங்களைத் தவிர்த்து, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காப்பீடு செய்யப்பட்ட இடம் அல்லது கட்டிடம் அல்லாத வேறு எந்த இடம் அல்லது கட்டிடத்திற்கு காப்பீடு செய்யப்பட்ட பொருட்கள் / சொத்து கொண்டு செல்லப்பட்ட வேளையில் அவற்றிற்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதம்.

(B) **பொது நிபந்தனைகள்**

1) **தவறான தகவல் / விவரணை:** தவறானத் தகவல், தவறான விவரணை அல்லது அறிந்த எந்தவொரு உண்மையையும் வெளிப்படுத்தாத நிலை ஆகிய நேர்வின்போது இந்த பாலிசியானது, செல்லாததாக ஆகிவிடும்.

2) அத்தகைய கட்டிடத்தின் ஒரு பகுதி அல்லது முழுவதும் அல்லது அத்தகைய கட்டிடங்களின் தொகுப்பில் ஏதாவது ஒரு பகுதி அல்லது ஏதாவது ஒரு கட்டமைப்பு விழுந்த அல்லது இடம்மாறிய நாளிலிருந்து 7 நாட்கள் முடிவடையும்போது இப்பாலிசியின் கீழ் உள்ள அனைத்து காப்பீடுகளும் நிறுத்தப்பட்டுவிடும் அல்லது இல்லாமல் போய்விடும்.

இப்பாலிசியின் கீழ், காப்பீட்டிற்குள் உள்ளடங்கியுள்ள ஆபத்துகளினால் அத்தகைய இடிந்து விழுதல் அல்லது இடம்மாறுதல் ஆகியவை ஏற்படாமல் இருக்கவேண்டும்.

மேற்கூறப்பட்டவைகள் எதுவாக இருப்பினும், அத்தகைய இடிந்துவிழுதல் அல்லது இடம்மாறுதல் நிகழ்விற்கு 7 நாட்களுக்கு மேல் மிகைப்படாமல், கூடிய விரைவில் மாற்றியமைக்கப்பட்ட கட்டணங்கள், விகிதங்கள், வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தீர்மானிக்கப்பட்டபடி மற்றும் இதற்காக எழுத்துப்பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளபடி, இக்காப்பீட்டினை தொடர்வதற்கு ஒப்புக்கொண்டு ஒரு விரைவு அறிவிக்கையை வழங்கவேண்டும்.

3) இழப்பு அல்லது சேதம் நிகழ்வதற்கு முன்பாக காப்பீடு செய்யப்பட்ட நபர், நிறுவனத்தின் அனுமதியை அல்லது அதன் சார்பாக அனுமதியைப் பெற்றிருந்து அதை பாலிசியில் இடம்பெறச் செய்திருந்தாலன்றி கீழ்வரும் சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்ட சொத்தைப் பொறுத்தவரை காப்பீடானது, இல்லாமல் போய்விடும்:

a) காப்பீடு செய்யப்பட்ட ஆபத்துகளினால் ஏற்படும் இழப்பு அல்லது சேத இடர்வாய்ப்பை அதிகரிக்கும் வகையில், மேற்கொள்ளப்பட்ட வர்த்தகம் அல்லது உற்பத்தி மாற்றப்படுமானால் அல்லது காப்பீடு செய்யப்பட்ட கட்டிடத்தைப் பாதிக்கின்ற பிற சூழ்நிலைகள் அல்லது காப்பீடு செய்யப்பட்ட சொத்தை வைத்திருக்கின்ற இடம் மாறுதல் செய்யப்படுமானால் அல்லது தங்குமிடத்தின் இயல்பு மாற்றப்படுமானால்,

b) காப்பீடு செய்யப்பட்ட கட்டிடம் அல்லது காப்பீடு செய்யப்பட்ட சொத்தை உள்ளடக்கியிருந்த அமைவிடம், யாரும் தங்கியிராதவாறு வெறுமனே விடப்பட்டு, 30 நாட்களுக்கும் அதிகமான காலஅளவிற்கு இருக்குமானால் (பிரிவு 3-ன் கீழ், வரக்கூடிய தங்குமிடத்திற்கு இது பொருந்தாது),

c) உயில் அல்லது சட்ட செயலாக்கம் ஆகியவற்றைத் தவிர, வேறு ஏதாவது காரணங்களுக்காக காப்பீடு செய்யப்பட்டவரிமிருந்து சொத்தின் மீதான உரிமை வேறொருவருக்கு மாறுமானால்,

4) இந்த காப்பீடு செய்யப்படாமல் இருந்திருக்குமானால், மெரைன் பாலிசி அல்லது பாலிசிகளின் கீழ் வழங்கப்படக்கூடிய தொகைக்கும் அதிகமாக ஏதாவது கூடுதல் தொகை வழங்கப்படுவதைத் தவிர்த்து, இந்த பாலிசி இல்லாதிருந்திருக்குமானால், வேறு எந்த மரைன் பாலிசி அல்லது பாலிசிகளின் கீழ், காப்பீடு செய்யப்பட்ட அல்லது செய்யப்படக்கூடிய நிலையிருக்கும்போது, அத்தகைய சொத்துக்கு ஏற்படும் எந்தவொரு இழப்பு அல்லது சேதத்திற்கு காப்பீடு இருக்காது.

5) காப்பீடு செய்யப்பட்டவரின் வேண்டுகோளின் பேரில் இந்த காப்பீடானது எந்த வேளையிலும் ரத்து செய்யப்படலாம். அத்தகைய நேர்வில், நிறுவனத்தின் குறைந்தகால அளவீடுகளில் இப்பாலிசி, அமலாக்கத்திலிருந்த காலத்திற்கான பிரிமியத் தொகையை நிறுவனமானது தன்வசம் வைத்துக்கொள்ளும். நிறுவனமும் அதன் விருப்ப முடிவின் பேரில் இக்காப்பீட்டை எந்த வேளையிலும் அதற்காக 15 நாள் அறிவிக்கை வழங்குவதன் மூலம் ரத்து செய்யலாம். அத்தகைய ஒரு நேர்வில், காலாவதியாகாத காப்பீடு கால அளவிற்கு ஏற்றாற்போல் பிரிமியத் தொகையின் விகிதாச்சாரப் பங்கை நிறுவனமானது, காப்பீடு செய்த நபருக்கு திரும்பக் கொடுப்பதற்கு பொறுப்புள்ளதாகும்.

6) (i) எந்தவொரு இழப்பு அல்லது சேதம் நிகழும்போது காப்பீடு செய்யப்பட்ட நபர், அது குறித்து நிறுவனத்திற்கு உடனடியாக தெரிவிக்கவேண்டும் மற்றும் இழப்பு அல்லது சேதத்திற்குப் பிறகு 15 நாட்களுக்குள் அல்லது எழுத்துப்பூர்வமாக நிறுவனம் அனுமதிக்கக்கூடிய கூடுதல் காலஅளவிற்குள் நிறுவனத்திற்கு கீழ்கண்டவற்றை வழங்கவேண்டும்.

(a) இழப்பு அல்லது சேதத்திற்கான உரிமக்கோரிக்கையை எழுத்துப்பூர்வமாக, முடிந்த அளவு யதார்த்தமான சாத்தியமுள்ள விதத்தில் அவ்வாறு சேதமான அல்லது அளிக்கப்பட்ட பல்வேறு பொருட்களின் விவரங்களையும் மற்றும் அப்பொருட்களின் இழப்பு அல்லது சேதத்திற்கான தொகையையும் வழங்கவேண்டும். அப்பொருட்கள் மீது கிடைக்கக்கூடிய லாபத்தை உள்ளடக்காமல், அழிவு அல்லது சேதம் நிகழ்ந்த நேரத்தின்போது பொருட்களுக்கு இருந்த மதிப்பையே கருத்தில் கொள்ளவேண்டும்.

(b) அனைத்து பிற காப்பீடுகளின், ஏதேனும் இருக்குமானால், விவரங்களை வழங்கவேண்டும். உரிமக்கோரிக்கை குறித்த அனைத்து வகையான கூடுதல் தகவல்கள், திட்டங்கள், அளவீடுகள், வவுச்சர்கள், ரசீதுகள், விலைச் சிட்டைகள் அவைகளின் பிரதிகள், ஆவணங்கள், புலன்விசாரணை

அறிக்கைகள் (உள்ளார்ந்த / வெளியார்ந்த) சாட்சியங்கள் மற்றும் தகவல்கள் மற்றும் இழப்பு அல்லது சேதத்தின் தொடக்கம் மற்றும் இழப்பு அல்லது சேதம் நிகழ்ந்ததற்கான சூழ்நிலைகள் மற்றும் நிறுவனத்தின் கடப்பாடு குறித்த எந்தவொரு விஷயம் அல்லது அந்த ஈட்டுறுதிக்கான தொகை ஆகிய விஷயங்களுக்கு நிறுவனத்தால் அல்லது நிறுவனத்தின் சார்பாக தேவைப்படுகின்ற அனைத்தையும் காப்பீடு செய்யப்பட்ட நபர் அனைத்து வேலைகளையும் அவரது சொந்த செலவில் திரட்டி, நிறுவனத்திற்கு வழங்கவேண்டும். இவற்றுடன், உரிமக்கோரிக்கையின் உண்மைநிலை குறித்தும் மற்றும் அதனோடு தொடர்புடைய அனைத்து விஷயங்கள் குறித்தும் உண்மை அறிவிக்கைக்கான உறுதிமொழி சான்றினையும் சேர்த்து வழங்கவேண்டும்.

இந்நிபந்தனையின் வரையறைகள் மற்றும் விதிகள் பின்பற்றப்பட்டிருந்தாலொழிய, இப்பாலிசியின் கீழ் எழும் எந்தவொரு உரிமக்கோரிக்கைக்கும் பணம் வழங்கப்படமாட்டாது.

(ii) உரிமக்கோரிக்கையானது, மத்தியஸ்தம் அல்லது நடவடிக்கை எடுப்பதற்கான விஷயமாக இருந்தாலொழிய இழப்பு அல்லது சேதம் நிகழ்ந்ததிலிருந்து 12 மாதங்கள் முடிந்தபிறகு, எந்தவொரு இழப்பு அல்லது சேதத்திற்காக நிறுவனம் எந்தவொரு நேர்விலும் பொறுப்பேற்காது: நிறுவனமானது இதன் கீழ் எந்தவொரு உரிமக்கோரிக்கைக்கும் பொறுப்புறுதியை ஏற்காது என கூறுமானால், அத்தகைய அறிவிப்பு தேதியிலிருந்து 12 காலண்டர் மாதங்களுக்குள் அத்தகைய உரிமக்கோரிக்கையானது நீதிமன்றத்தில் வழக்குக்குரிய விஷயமாக செய்யப்பட்டாலொழிய அத்தகைய உரிமக்கோரிக்கையானது, அனைத்து நோக்கங்களுக்காகவும் கைவிடப்பட்டதாக கருதப்படும் மற்றும் இதன் கீழ் அதற்குப் பிறகு பெற இயலாததாக ஆகிவிடும் என்று தெளிவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது மற்றும் அறிவிக்கப்படுகிறது.

7. இப்பாலிசியின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ள எந்தவொரு சொத்துக்கும் இழப்பு அல்லது சேதம் ஏற்படும் நிகழ்வின்போது நிறுவனமானது, கீழ்கண்டவற்றை செய்யக்கூடும்:

a) இழப்பு அல்லது சேதம் ஏற்பட்ட கட்டிடம் அல்லது வளாகத்திற்குள் நுழைந்து, அதனை தன்வசத்தின் கீழ் வைத்துக்கொள்ளலாம்.

b) இழப்பு அல்லது சேதத்தின்போது அக்கட்டிடத்தில் அல்லது அந்த வளாகத்தில் இருக்கின்ற காப்பீடு செய்யப்பட்ட நபரின் எந்தவொரு சொத்தையும் தன்வசப்படுத்திக் கொள்ளலாம் அல்லது அதனை தன்னிடம் சேர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளலாம்.

c) அத்தகைய சொத்து எதனையும் தன்வசத்தில் வைத்திருக்கலாம் மற்றும் அதனை பரிசோதிக்கலாம் / பிரிக்கலாம், அடுக்கலாம், அகற்றலாம் அல்லது அதனை வேறு எப்படியாவது கையாளலாம்.

d) அத்தகைய சொத்தினை விற்கலாம் அல்லது அது யாருக்குத் தொடர்புடையதோ அந்நபருக்கு கொடுத்துவிடலாம்.

இப்பாலிசியின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட நபர், எந்த உரிமக்கோரிக்கையும் எழுப்பவில்லை என்று எழுத்துப்பூர்வமாக அறிவிக்கும் வரை அல்லது ஒரு உரிமக்கோரிக்கை எழுப்பப்படும்போது அத்தகைய உரிமக்கோரிக்கையானது, இறுதியாக தீர்மானிக்கப்படும் வரை அல்லது விலக்கிக்கொள்ளப்படும் வரை, எந்த நேரத்திலும் நிறுவனத்தால் இந்த நிபந்தனையின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நிறுவனமானது பிரயோகிக்கலாம் மற்றும் இதன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்துவதன் வழியாக, காப்பீடு

செய்யப்பட்ட நபருக்கு எந்தவொரு பொறுப்புறுதியையும் ஏற்காது அல்லது எந்தவொரு உரிமக்கோரிக்கைக்கும் பதிலாக இப்பாலிசியின் எந்தவொரு நிபந்தனைகளையும் சார்ந்திருப்பதற்கு தனது உரிமைகளைக் குறைத்துக்கொள்ளாது.

காப்பீடு செய்யப்பட்ட நபரோ அல்லது அவரது சார்பாக செயல்படும் வேறு எந்த நபரோ நிறுவனத்தின் தேவைப்பாடுகளைப் பின்பற்றி நடக்கவில்லையென்றாலோ அல்லது இதன்கீழ் நிறுவனம் கொண்டிருக்கின்ற அதிகாரங்களை செயல்படுத்த தடை செய்தாலோ அல்லது இடையூறு ஏற்படுத்தினாலோ இப்பாலிசியின் கீழ் கிடைக்கக்கூடிய அனைத்து ஆதாயங்களும் இழக்கப்பட்டதாகிவிடும்.

நிறுவனத்தால் தன்வசம் எடுத்துக்கொள்ளப்பட்டாலும் அல்லது இல்லையென்றாலும் எந்தவொரு சொத்தையும் நிறுவனத்துடன் கைவிட்டுவிட காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு எந்தநேர்விலும் உரிமையில்லை.

8. உரிமக்கோரிக்கையானது, எந்தவிதத்திலும் மோசடியானதாக இருக்குமானால் அல்லது தவறான அறிவிக்கை செய்யப்பட்டிருக்குமானால் அல்லது ஆதரவு சாட்சியமாக பயன்படுத்தப்பட்டிருக்குமானால் அல்லது காப்பீடு செய்யப்பட்ட நபரால் அல்லது அவரது சார்பாக செயல்படுகின்ற ஒரு நபரால் பாலிசியின் கீழ் எந்தவொரு ஆதாயத்தையும் பெற, தவறான / மோசடி வழிகள் அல்லது சாதனங்கள் பயன்படுத்தப்பட்டிருக்குமானால் காப்பீடு செய்யப்பட்ட நபரின் உதவி அல்லது உடன்பாட்டோடு அல்லது வேண்டுமென்றே செய்யப்பட்ட செயலால் இழப்பு அல்லது சேதம் நிகழ்ந்திருக்குமானால், இப்பாலிசியின் கீழ் கிடைக்கக்கூடிய அனைத்து ஆதாயங்களும் இழக்கப்பட்டதாகிவிடும்.

9. நிறுவனமானது அதன் விருப்பத்தேர்வின் பேரில் இழப்பு அல்லது சேதத்திற்கான தொகையை வழங்குவதற்குப் பதிலாக, அழிந்துபோன அல்லது சேதமான சொத்தை அல்லது அதன் ஒரு பகுதியை மாற்றித்தரலாம் அல்லது மாற்றியமைத்துத் தரலாம் அல்லது வேறு எந்த நிறுவனம் அல்லது காப்பீடு வழங்குவோரோடு இதனை சேர்ந்து மேற்கொள்ளலாம் மற்றும் அவ்வாறு செய்யும்போது முழுமையாகவோ அல்லது அசல் போன்றோ மாற்றியமைத்துதர நிறுவனம் பொறுப்பு கொண்டிருக்காமல், சூழ்நிலைகள் அனுமதிக்கின்றபடி மற்றும் முடிந்தஅளவு போதுமான வகையில் மாற்றித்தர பொறுப்பேற்கும். நிறுவனத்தால் காப்பீடு செய்யப்பட்ட தொகையை விட அதிகமாகவோ அல்லது அந்நிகழ்வு நடைபெற்ற நேரத்தில் அத்தகைய சொத்தை மாற்றியமைக்க என்ன செலவாகியிருக்குமோ அதைவிட அதிகமாக செலவிட எந்த நேர்விலும் நிறுவனம் பொறுப்பு கொண்டிருக்காது. எந்தவொரு சொத்தையும் மாற்றித்தர அல்லது மாற்றியமைத்துதர நிறுவனம் முடிவு செய்யுமானால், நிறுவனத்திற்கு தேவைப்படுகின்ற திட்டங்கள், அளவீடுகள், குறிப்பாணைகள், அளவுகள் மற்றும் வேறுஎந்த தொடர்புடைய விவரங்களை காப்பீடு செய்யப்பட்ட நபர் அவரது சொந்த செலவில் நிறுவனத்திற்கு வழங்கவேண்டும். மாற்றித்தர அல்லது மாற்றியமைத்து தரும் நோக்கத்துடன் நிறுவனம் செய்யாத அல்லது செய்யுமாறு விளைவிக்காத எந்தவொரு செயல்களும் அவ்வாறு மாற்றித்தர அல்லது மாற்றியமைத்துத்தர நிறுவனம் முடிவு செய்திருப்பதாக கருதப்படாது.

10. இதன்கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ள சொத்தானது, ஏதாவது தீ விபத்தினால் அல்லது இதன்கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ள வேறுஎந்த ஆபத்தினால், ஏதாவது அழிவு அல்லது சேதம் தொடங்கும்போது, அதன்மீது காப்பீடு செய்யப்பட்ட தொகையைவிட ஒட்டுமொத்தமாக கூடுதல் மதிப்பைக் கொண்டிருக்குமானால், அந்த வித்தியாச தொகைக்கு காப்பீடு செய்யப்பட்ட நபரின் அவரது சொந்த காப்பீடு செய்யும் நபராக

கருதப்படுவார் மற்றும் விகிதாச்சார அளவின்படி அவ்விழப்பை பகிர்ந்துகொள்வார். பாலிசியில் ஒன்றுக்கும் மேற்பட்டு இருக்குமானால், ஒவ்வொரு பொருளும் இந்நிபந்தனைக்கு தனித்தனியாக உட்பட்டதாக அமையும்.

11. இதன்கீழ் காப்பீடு செய்யப்பட்ட எந்தவொரு சொத்திற்கும் இழப்போ அல்லது சேதமோ நிகழ்கின்ற நேரத்தில் வேறு ஏதாவது காப்பீடு அல்லது காப்பீடுகள் அதற்கு இருக்குமானால், அந்த சொத்துக்கான ஈட்டுறுதிக்கான காப்பீடு செய்யப்பட்ட நபரால் அல்லது வேறுஎந்த நபரால் அல்லது நபர்களால் செய்யப்பட்டிருக்குமானால், அத்தகைய இழப்பு அல்லது சேதத்திற்கு விகிதாச்சார அளவுக்கும் அதிகமாக பணம் வழங்கவோ அல்லது பங்களிப்பு செய்யவோ இந்நிறுவனம் பொறுப்பு கொண்டிருக்காது.

12. இப்பாலிசியின் கீழ், இழப்பு அல்லது சேதத்திற்கு ஈட்டுறுதி தொகையை வழங்கிய பிறகு, ஈட்டுறுதி வழங்கப்பட்டதற்கு முன்போ அல்லது பிறகோ அவசியமாகின்ற அல்லது தேவைப்படுகின்ற அனைத்து செயல்கள் மற்றும் விஷயங்களை நிறுவனத்திற்கு நியாயமாக தேவைப்படுகின்ற நிலையில், நிறுவனத்தின் செலவில் காப்பீடு செய்யப்பட்ட நபர், செய்வதாகவும் மற்றும் செய்ய அனுமதிப்பதாகவும் ஒப்புக்கொள்கிறார். ஈட்டுறுதி வழங்கியதற்குப் பிறகு, நிவாரணம் அல்லது ஈட்டுறுதியை பிற நபர்களிடமிருந்து பெறுவதற்கு நிறுவனத்திற்கு உரிமையுள்ளபோது அந்த நோக்கத்திற்காக எந்தவொரு உரிமைகள் மற்றும் தீர்வுகளை அமல்படுத்துவதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் காப்பீடு செய்யப்பட்ட நபர் எடுப்பதாகவும் இதன்படி ஒப்புக்கொள்கிறார்.

13. இப்பாலிசியின் கீழ் வழங்கப்பட வேண்டிய தொகையின் அளவு குறித்து ஏதேனும் சர்ச்சை அல்லது வேறுபாடு எழுமானால் (கடப்பாடு பொறுப்பு ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தாலொழிய) அத்தகைய வேறுபாடானது, பிற அனைத்து கேள்விகளையும் பொருட்படுத்தாது, இரு தரப்பினராலும் எழுத்துப்பூர்வமாக நியமிக்கப்படும் ஒரேயொரு நடுவரின் (மத்தியஸ்தரின்) முடிவிற்கு விடப்படும் அல்லது தனிநபர் மத்தியஸ்தர் குறித்து இரு தரப்பினரும் ஒப்புக்கொள்ளவில்லை என்றால், மத்தியஸ்தத்தைக் எந்தவொரு தரப்பாவது கோரிய நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அது மூன்று நபர்கள் அடங்கிய மத்தியஸ்த குழுவிடம் அனுப்பப்படவேண்டும். இக்குழுவில் இச்சர்ச்சை / வேறுபாடு உடைய தரப்பு ஒவ்வொன்றாலும் நியமனம் செய்யப்படும் ஒரு நபர் என இரு மத்தியஸ்தர்களும் மற்றும் இத்தகைய இரு மத்தியஸ்தர்களால் கலந்துபேசி நியமனம் செய்யப்படுகின்ற மூன்றாவது மத்தியஸ்தரும் அடங்குவர். இத்தகைய மத்தியஸ்தமானது, மத்தியஸ்தம் மற்றும் சமரச சட்டம் 1996 – விதிகளுக்கொப்ப மேற்கொள்ளப்படும்.

இந்த பாலிசி தொடர்பாக அல்லது இதன் கீழ் நிறுவனமானது கடப்பாடு பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அல்லது அது குறித்து சர்ச்சை எழுப்பினால், மேற்கூறப்பட்டபடி மத்தியஸ்தத்திற்கு எந்தவொரு வேறுபாடு அல்லது சர்ச்சையானது அனுப்பப்பட மாட்டாது என்பது தெளிவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது அல்லது புரிந்துகொள்ளப்பட்டுள்ளது.

இந்த பாலிசியின் மீது எந்தவொரு நடவடிக்கை அல்லது வழக்கு தொடர்வதற்கான எந்தவொரு உரிமைக்கும் முன்பாக, அத்தகைய மத்தியஸ்தர்கள் அல்லது இழப்பு அல்லது சேதத்திற்கான அளவு அல்லது தொகை என்பது மீது, நடுவர் வழங்கும் தீர்ப்பு அல்லது முடிவு முதலில் பெறப்பட வேண்டும் என்று இதன் வழியாக தெளிவாக குறிப்பிடப்படுகிறது மற்றும் அறிவிக்கப்படுகிறது.

14. இந்நிபந்தனைகள் தொடர்பாக மற்றும் மற்றும் இதன்படி அவசியப்படுகின்ற அனைத்து வகையான நோட்டிஸ்கள் மற்றும் பிற தகவல்களை எழுத்துப்பூர்வமாக அல்லது அச்சிட்டு நிறுவனத்திற்கு அனுப்பவேண்டும்.

15. இப்பாலிசி அமலிலுள்ள காலஅளவின் அனைத்து நேரங்களிலும் காப்பீட்டுறுதியானது, காப்பீடு செய்யப்பட்ட தொகையின் முழு மதிப்பிற்கு பராமரிக்கப்பட வேண்டும். இப்பாலிசியின் கீழ் எந்தவொரு இழப்பிற்காக ஈட்டுறுதி / தீர்வு வழங்கப்படும்போது அத்தகைய இழப்பு நிகழ்ந்த நாளிலிருந்து காப்பீடு காலாவதியாகும் காலஅளவு வரை, காலாவதியாகாத காலஅளவிற்காக அத்தகைய இழப்பிற்கான தொகையை காப்பீடு செய்யப்பட்ட நபர் நிறுவனத்திற்கு செலுத்தவேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட கூடுதல் பிரீமியத்தொகையானது, இப்பாலிசியின் கீழ் வழங்கப்படக்கூடிய க்ளைம் தொகையிலிருந்து கழித்துக் கொள்ளப்படும். முந்தைய ஏதாவது இழப்பிற்காக நிறுவனம் இப்பாலிசியின் கீழ் ஈட்டுறுதி தொகையை வழங்கியிருந்தாலும் மற்றும் அத்தகைய இழப்பை தொடர்ந்து மேற்குறிப்பிடப்பட்ட கூடுதல் பிரீமியம் உண்மையில் செலுத்தப்பட்டிருந்தாலோ அல்லது செலுத்தப்படாமலிருந்தாலோ தொடர்ச்சியான காப்புறுதி முழு மதிப்பிற்கு கிடைக்கும். இழப்பு நிகழ்ந்த தேதியிலிருந்து, பாலிசி காலாவதியாகும் தேதிவரை கணக்கிடப்படக்கூடிய புரோ-ரேட்டா பிரீமியத்தொகையை, க்ளைம் தொகையிலிருந்து பிடித்தம் செய்து வழங்குகின்ற நிறுவனத்தின் உரிமைக்கு உட்பட்டு, காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு காப்புறுதி தொடர்ந்து இருப்பதை உறுதி செய்வதே இந்நிபந்தனையின் நோக்கமாகும்.

மேற்குறிப்பிடப்பட்டவை எப்படி இருப்பினும், காப்பீடு செய்யப்பட்ட நபர் இழப்பு நேர்ந்தவுடன், மேற்குறிப்பிட்டபடி காப்பீடு செய்யப்பட்ட தொகையை மீண்டும் முந்தைய நிலையில் பராமரிக்கத் தேவையில்லை என்ற விருப்பத்தேர்வை பிரயோகிப்பாரானால், காப்பீடு செய்யப்பட்ட தொகையானது, இழப்பிற்கான தொகையை கழித்து கிடைக்கின்ற எஞ்சியத் தொகையாகவே இருக்கும்.